இம்மருந்தகத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ளது. இம்மருந்தகத்திற்குத் தேவையான மருந்துகள் சென்னை அரும்பாக்கத்தில் உள்ள அறிஞர் அண்ணு இந்திய மருத்துவ மனையில் தயாரிக்கப்பட்டு அவ்வப்போது தாமதமின்றி கொண்டுவரப் படுகிறது. நோயாளிகட்கு இரண்டு நாட்களுக்கு மேலும் ,ஐந்து நாட்களுக்கு அதிகமாகாமலும் மருந்து வழங்க உத்தரவிடப்பட்டிருக்கிறது.

## Practitioners in Indian System of medicine

* 27 Q.—THIRU R. R. MUNUSWAMY : Will the Hon. the **Minister for Public Health be pleased to state—**

(a) whether the time limit for registration as **practitioners** of Indian System of Medicine, has been extended; and

(b) if so, the details thereof?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** (அ) & (இ) ஆம்.

வைத்திய மரபில் பயிற்சி பெற்றவர்கள் அல்லது பரம்பரை வைத்தியர் கள் அல்லது வைத்திய மரபில் பயிற்சி பெற்றதுடன் பரம்பரை வைத்தியர்களாக இருப்பவர்கள் ஆகியோர் இந்திய மருத்துவ மத்தியக் கழகத்தில் பதிவு செய்து கொள்வதற்கான கால வரம்பு கடைசி முறையாக 31—3—1973 வரை நீடிக்கப் பட்டிருக்கிறது.

## அரசு மருத்துவ மனைப் பணியாளர்களுக்குக் குடியிருப்புகள்

* 28. வினா—**திரு. கா. வேழவேந்தன் :** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

பெரிய அரசு மருத்துவ மனைகளில் பணிபுரியும் ஊழியர்களுக்கு அருகி லேயே குடியிருப்பு வசதிகள் செய்துதரச் சிறப்புத் திட்டம் ஏதேனும் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** இல்லை.

**திரு. கா. வேழவேந்தன் :** துணைத் தலைவர் அவர்களே, பெரிய மருத்துவ மனைகளிலே பணியாற்றுகிற செவிலியர்களுக்கு எல்லாம் 'குவார்ட்டர்ஸ்' அமைக்கப்பட்டிருக்கின்றன. நிரந்தரமான ஊழியர்களாக பணியாற்றுகின்ற வர்களுக்கான அவர்கள் பணியாற்றுகின்ற மருத்துவ மனைகளுக்குப் பக்கத்திலேயே அவர்களுக்கான குடியிருப்பு இடங்கள் ஏற்படுத்த எதிர் காலத்திலாவது ஒரு சிறப்புத் திட்டம் கொண்டுவர அரசு ஆவனசெய்யுமா ?

1972 டிசம்பர் 4]

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** தலைவர் அவர்களே, 1967 ஆம் ஆண்டில் இடப்பட்ட அரசு ஆணையின்படி, நாட்டினுடைய முக்கியமான நெருக்கடி நிலைமைகள் காரணமாகவும் நிதிப் பற்றுக்குறை காரணமாகவும் வீடுகள் அரசு அலுவலர்களுக்குக் கட்டித் தரும் திட்டம் கைவிடப்பட்டது. ஆனால் ஆரம்ப சுகாதார நிலையங்கள் போன்ற கிராமப் புறங்களிலே உள்ள மருத்துவ மனைகளிலே பணியாற்றுகின்றவர்களுக்கு குடியிருப்புகள் கட்டிக் கொடுப்பதற்கான முறை இருக்கிறது. இதைத்தவிர மிக முக்கியமான மருத்துவ மனைகளிலே பணியாற்றுகின்ற செவிலியர்களுக்கு எங்கெங்கே அவசியமோ அங்கங்கே குடியிருப்புக்கள் அவ்வப்பொழுது அமைப்பதற்கு விதி தளர்த்தப்பட்டு வீடுகள் கட்டவும் ஒரு முயற்சி இருக்கிறது.

### கோவை மாவட்டத்திலுள்ள மேய்ச்சல் நிலங்கள்

*29. **வினா—திரு. சு. துரைசாமி:** மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) கோவை மாவட்டத்தில் நில உச்சவரம்பு சட்டத்தின் கீழ் கொண்டு வரப்படாமல் 'மேய்ச்சல் காடு' என ஒதுக்கப்பட்ட நிலம் எத்தனை ஏக்கர்?

(ஆ) மேய்ச்சல் காடுகளுக்காக 50 ஏக்கருக்கு மேல் எவ்வளவு பேருக்கு விதிவிலக்கு கொடுக்கப்பட்டுள்ளது?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** (அ) & (ஆ) தமிழ்நாடு 1961-ஆம் ஆண்டு நிலச்சீர்திருத்தங்கள் (நிலவுடைமைக்கு உச்சவரம்பு கட்டுதல்) சட்டத்தின் 74-வது பிரிவின்கீழ், அப்பிரிவு 1971-ஆம் ஆண்டு 41-வது சட்டத்தினால் நீக்கப்படுவதற்கு முன், ஒருவர், உச்சவரம்பிற்குட்பட்ட தம்முடைய நிலப்பரப்பிற்கும் அதிகமாக, ஏக்கர் ஒன்றுக்கு ரூ.1-25-ம் அதற்கு குறைவாகவும் நிலவரி விதிக்கப்பட்ட நிலங்களை 50 ஏக்கர் வரை மேய்ச்சலுக்காக வென்றே வைத்துக் கொள்ளலாம். இப்பிரிவின்கீழ், கோயம்புத்தூர் மாவட்டத்தில், 436 பேர் உச்சவரம்பிற்குட்பட்ட தம்முடைய நிலங்களும் கூடுதலாக மேய்ச்சலுக்கான நிலங்களை வைத்துக்கொள்ள அனுமதிக்கப்பட்டனர். இந்த 436 பேர்கள் மேய்ச்சல் நிலமாக வைத்துக்கொள்ள அனுமதிக்கப்பட்டிருந்த மொத்த நிலப்பரப்பு 9,550-42½ ஏக்காராகும். மேய்ச்சல் நிலங்களுக்கென அளிக்கப்பட்டிருந்த விலக்கை 1971-ஆம் ஆண்டு 41-வது சட்டத்தின்கீழ் நீக்கியதினால், 74-வது பிரிவின்கீழ் ஏனைய மாவட்டங்களில் மேய்ச்சலுக்கென விலக்கு அனுமதி அளிக்கப்பட்டிருந்த நிலங்களுடன், இந்த நிலங்கள் அனைத்தையும் கையகப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.